



## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் -சேலம் மாவட்டம்
## கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம்

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், எருமைப்பட்டி ஊராட்சி/ கிராமம் சர்வே எண்: 148/1A1C2-ல் அமையும் குடியிருப்பு மனைஒப்புதலுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைப்படம். (திட்டமில்லாத பகுதி)

| | | |
|---|---|---|
| கோப்பு எண் | : | SLM/UDKC5KHR/27384/2024 |
| இணையதள விண்ணப்ப எண் | : | UDKC5KHR |
| அளவு | : | 1:400 |

N

**குறிப்பு:**

| | | |
|---|---|---|
| மனைஒப்புதல் மொத்தப்பரப்பு | : | 0.135 ஏக்கர் (அ) 546.33ச.மீ |
| மனையின் எல்லை (ABCD) | : | |
| நிலையில் உள்ள சாலை | : | |

**பொது ஒதுக்கீடுகள்:**

நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/BA2, நாள்.05.02.2020-ன் படி 10% பூங்காவிற்கான அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகை மனுதாரர் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

மூலை முடக்கு:

12.0மீ அகல சாலை வரை 1.5மீx1.5மீ விடப்படல் வேண்டும்

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண் 18-ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (M.A.I) நாள் 04.02.2019-ன் படி உள்ள நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 16-ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (M.A.I) நாள் 31.01.2020-ன் படி உள்ள நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண் 181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சி ந.வ.4(1) துறை நாள் 09.12.2020-ன் படி நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
4. இம்மனைஒப்புதலுக்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சி தலைவர் உறுதி செய்துகொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்க்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைஒப்புதலுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைஒப்புதலுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத ் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/ திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் - குத்தகைப்பத்திரம் - பட்டா - தானப்பத்திரம் - பொது அதிகாரப்பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருகு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமைக் கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. நீர்நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
11. இம்மனைஒப்புதலுக்கு அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அகற்றப்பட வேண்டும்.
12. மனைஒப்புதலுக்கு ஊடே செல்லும் குறைந்த மற்றும் உயர்மின் அழுத்த கம்பி பாதையினை மனுதாரர் தன் சொந்த செலவில் சாலையின் போக்கில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

**APPROVAL NO: SWP/DTCP/SALEM/ LAYOUT (Site Approval) NO: 224 /2025**

.கிருபா
தவி வரைவாளர்

ராகேஷ் ரவி
வரைவாளர் நிலை - III

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
சேலம் மாவட்டம்.